செய்தி வெளியீடு எண்: 564 நாள்: 14.03.2024

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அனைத்துச் செயல்பாடுகளும் ரூ.36.60 கோடி மதிப்பீட்டில் முழு கணினி மயமாக்கல் – மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் அறிக்கை**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு மற்றும் பாமாயில் உள்ளிட்ட இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்து, சேமித்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கும் உன்னத பணிகளை மேற்கொண்டு வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்யும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. 1972 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முதல்வர்களின் முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றபின் பொன்விழா கண்டு சிறப்பான சேவைகளைத் தொடந்து வழங்கி வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டங்களுக்குப் பொருட்கள் கொள்முதல், கிட்டங்கிகளில் சேமித்தல், விநியோகித்தல், கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் தரம் பார்த்தல், நெல் கொள்முதல், கொள்முதல் செய்த நெல்லை அரவை ஆலைகளுக்கு அனுப்புதல், கொள்முதல் நிலையங்களிலிருந்து கிட்டங்கிகளுக்கும் அரவை ஆலைகளுக்கும், பொது விநியோகத்திட்ட அங்காடிகளுக்கும், லாரிகள் மூலம் இயக்கம் செய்தல், கேழ்வரகு கொள்முதல் செய்தல், பணியாளர் நிர்வாகம், வரவு செலவுக் கணக்குகளைப் பராமரித்தல் உள்ளிட்ட பணிகளை மேம்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.36.60

கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அனைத்துப் பணிகளையும் முழு கணினிமயமாக்கப்பட ஆணையிட்டுள்ளார்கள்.

இதனால் பொது விநியோகத் திட்டத்தினை மேலும் செம்மைப்படுத்தி அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் தரமான பொருட்கள், உரிய நேரத்தில் கிடைத்திடுவதை உறுதி செய்திடவும், அரசு நேரடி கொள்முதல் நிலையங்களின் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல் மற்றும் கேழ்வரகிற்குரிய தொகையினை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் உடனடியாகச் செலுத்தி. கொள்முதல் செய்யப்படும் தானியங்களைத் துரிதமாக அரவை ஆலைகளுக்கு நகர்வு செய்தல், அரவை ஆலைகளில் இருந்து பெறப்படும் அரிசியினைக் கிட்டங்கிகளில் சேமித்து தேவையின் அடிப்படையில் நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்தல் ஆகிய பணிகள் முழுதும் ஒருங்கிணைக்கப்பட்டு அனைத்துப் பணிகளின் திறனும் கணினிமயமாக்கல் மூலம் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகப் பணிகள் அனைத்தும் முழு கணினிமயமாக்கப்பட்டு மென்பொருளைச் செயல்படுத்துவதன் மூலம் பணியாளர்கள் பணிநியமனம் முதல் பணிஓய்வு மற்றும் பணப்பயன்கள் பெறும் வரையிலான செயல்கள் விரைவுபடுத்தப்பட்டு உடனுக்குடன் பயன் பெறுவார்கள்.

பொது விநியோகத் திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டம், ஒப்பந்தப் பணிகள், பட்டுவாடா செய்யப்படும் தொகை, உற்பத்தி மற்றும் காலாவதி நாள், சேமித்து வைக்கப்படும் கிட்டங்கிகள், இயக்கம் செய்யப்படும் பொது விநியோகத் திட்ட அங்காடிகள், பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படும் வரை மென்பொருள் வாயிலாக முழு கணினிமயமாக்க நடவடிக்கைகளால் பொது விநியோகத் திட்டம் மேலும் வெளிப்படைத் தன்மையுடனும் மேம்பட்ட திறனுடனும் செயல்படுத்தப்படும்.

பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் பொருட்களைச் சேமித்து வைக்கும் கிட்டங்கிகளில் உள்ள இருப்பின் அளவினைத் தலைமையிடத்தில் இருந்தே கண்காணித்து இருப்பின்மையைத் தவிர்த்து, தேவைக்கேற்ப கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகளின் மூலம் எவ்வித தொய்வுமின்றி வழங்க வழி செய்ய இயலும்.

மென்பொருளில் விவசாயிகளுக்கென தனி செயலி உருவாக்கப்படுவதன் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படும் நாட்கள் மற்றும் நேரம், இடம் உள்ளிட்ட விவரங்களைச் செயலி மூலம் விவசாயிகள் அறிந்துகொண்டு, நெல்லினை உரிய நேரத்தில் விற்பனை செய்திட தாங்களே நாள் மற்றும் நேரங்களைத் தேர்வு செய்திடவும் விற்பனை செய்யப்படும் நெல்லின் அளவு, விலை, வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் தொகையின் விவரம் தெரிந்து பயன்பெறவும் தினசரி வானிலை அறிக்கையினைச் செயலியின் மூலம் அறிந்து கொண்டு வேளாண் பொருட்களைப் பாதுகாத்திடவும் இயலும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டுக் கணக்கினைப் புதிய மென்பொருள் வாயிலாக விரைந்து முடித்திட இயலும். கழகத்தின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் விவரங்களையும் மென்பொருள் வாயிலாக எளிதாக பராமரிக்க முடியும்.

பொது விநியோகத் திட்டச் செயல்பாடுகளைக் கள ஆய்வு செய்யும் அதிகாரிகளின் அறிக்கை மற்றும் விழிப்புபணிக்குழுவினரின் ஆய்வு சம்மந்தமான அறிக்கைகளைச் செயலி உருவாக்கப்படுவதன் வாயிலாக மேம்படுத்தி புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, குறைகளை விரைந்து களைய முடியும்.

இவ்வாறு பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் விரைந்து மேம்பட்ட தன்மையுடன் செயல்படும் வகையில் முழுதும் கணினிமயமாக்க ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in